Paper Mill for Udangudi

* 72 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal pending now before the Government to establish a paper mill at Udangudi in Tiruchendur taluk in Tirunelveli district in the public sector; and

(b) if so, the particulars thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, காலஞ்சென்ற முதல் அமைச்சர் அண்ணாதுரை அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் அரசாங்கம் வரிவிதிப்புச் செய்யாமல் காகிதம் செய்தல் போன்ற சிறு தொழில்களை ஆரம்பித்து அரசாங்க வருவாயைப் பெருக்கிக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும் என்று சொன்னார்களே, அந்த யோசனையின் அடிப்படையில் இந்த அரசு — திருநெல்வேலியில் திருச்செந்தூர் தாலுக்காவில் காகிதத் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருள்கள் கிடைப்பதால் அங்கே அரசாங்கமே பத்திரிகை காகித உற்பத்தித் தொழிற்சாலையை ஏற்படுத்த முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: காலஞ்சென்றதற்குப் பிறகாவது அப்பேரறிஞர் குறிப்பிட்டவற்றில் பொருள் இருக்கிறது என்பதை உணர்ந்து சுட்டிக்காட்டுவதற்கு பெரும் மகிழ்ச்சி. அந்தப் பகுதியில் யார் அந்தத் தொழிலை நடத்த முன்வந்தாலும் அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்யத் தயாராய் இருக்கும்.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் இருந்து ஏராளமான அகதிகள் அந்தத் திருச்செந்தூர் தாலுக்கா பகுதிக்கு வர இருக்கிற காரணத்தினால் அவர்களுடைய புனர் வாழ்வுக்காக அரசு தரப்பிலேயே அந்தப் பகுதியில் காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பத்திரிகைக் காகித உற்பத்தித் தொழிற்சாலையை அரசாங்கத் தரப்பில் ஆரம்பிப்பதாக இல்லை. இதுபோன்ற தொழில் இப்போதே பலவிடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் தனியார் துறையில் யார் ஆரம்பிக்க முன்வந்தாலும் அரசாங்கம் உதவி செய்யத் தயாராய் இருக்கிறது.

லாரி சொந்தக்காரர்கள் வேலை நிறுத்தம்

* 73 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 7—7—1970 தேதி அன்று தமிழ்நாடு முழுவதும் லாரிகள் ஓடவில்லை யென்பது உண்மையா ?